

3 OCT 1962
MADRAS

பெரிய வெண் கொக்கு.

# வேடந்தாங்கல் நீர்ப்பறவைக் காப்புசாலை

AHB
426-B

426-B

# வேடந்தாங்கல் நீர்ப்பறவைக் காப்புசாலை

©
தமிழ்நாடு அரசாங்கம்
1961

தமிழ்நாடு காட்டு இலாகாவினரால்
வெளியிடப்பட்டது
1961

விலை : 0·50 ந.பை.

# முன்னுரை

1959-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பெயர்பெற்ற இயற்கை ஆய்வாளர் திரு. மா. கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பெற்ற ''முதுமலை வனவிலங்கு சரணாலயத்தைப்'' பற்றிய ஒரு வெளியீட்டை சென்னை கான்துறை வெளியிட்டது. அக்டோபர்த் திங்கள் 1960-ல் இவ்விலாக்கா அன்னார் எழுதிய ''வேடந்தாங்கல் சரணாலயத்தைப்'' பற்றிய ஒரு அழகிய ஆங்கில வெளியீட்டை வெளியிட பெருமிதம் கொண்டது. இப்பொழுது, இந்தத் தமிழ் வெளியீட்டை வெளியிடுகிறது. இதை வெளியிடுவதற்கு திரு. மா. கிருஷ்ணன் அவர்கள் தந்து உதவிய விஷய தானங்களுக்கும், புகைப் படங்களுக்கும் தமிழ்நாடு காட்டிலாக்கா என்றென்றும் அன்னாருக்குக் கடமைப்பட்டதாகும். திரு. மா. கிருஷ்ணன் அவர்கள் மென்மேலும் நமது நாட்டின் வனவிலங்குகள் செல்வத்தைப் பற்றி எழுத மேற்கொண்டிருக்கும் இப்பணிக்கு இவ்விலாக்காவின் நன்றி உரித்தாகுக.

பறவையினங்கள் இவ் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு, அநேக வருடங்களாக அந்தந்தப் பருவ காலங்களில் வழக்கமாகப் பறந்து வந்து, வசிப்பதாக நாம் அறிகிறோம். இப் பறவையினங்கள் ஆயிரக் கணக்கில் கூடுவதால் அவைகளின் கழிவுப்பொருள்கள் உரமாக மாறி, இச் சரணாலயத்துச் சுற்றுப்புற மக்களுக்கு எவ்வாறு தொண்டு புரிந்துகொண்டிருக்கின்றன என்பதை இச்சுற்றுவாழ் மக்கள் இப் பறவைகளையும், அவைகள் வாழும் இருப்பிடத்தையும், கண்ணுங் கருத்துமாக தீங்கு விளைவிக்கக் கருதும் ஜந்துக்களிடமிருந்து பாதுகாத்து வருகிறார்கள் என்பதிலிருந்து தெளிவுற அறியலாம்.

இந்த இடம் ஒவ்வொரு வருடத்திலும், நவம்பர் முதல் மார்ச்சுத் திங்கள் முடிய காலங்களில் பார்ப் போரை பரவசப்படுத்தக்கூடியதாகவும், இவ்வினங் களால் ஒருவித புத்துயிர் பெற்று விளங்குவதாகக் காட்சி யளிக்கும்.

வேடந்தாங்கல் பறவைகளின் சரணாலயம் நமது சென்னை நகரிலிருந்து 52 கல் தூரத்தில் அமைந்திருக் கிறது. இச்சரணாலயம் தன்னுள் ஒரு பெரிய நீர்ப்பாசன ஏரியையும், அதன் மத்தியில் தாழ்ந்து, கொப்புங்கிளைகளு மாக அநேக கடப்பை மரங்களையும் கொண்டது. இம் மரங்களின் ஒவ்வொரு கிளையிலும் அநேகப் பறவைகள் தத்தம் உறைவிடங்களை அமைத்துக்கொண்டு வசிக்கின் றன. இந்த இடம் அதிகாலையிலும், மாலை நேரங்களிலும் கலகல என, சலசலப்புடன் காட்சியளிக்கும். இந்த நேரங்களில் இவ்விடம் காண்போர் மனம் பரவசமடைய பார்ப்பதற்கு மிகவும் அழகுற இருக்கும்.

இப் புத்தகம் பறவையினங்களிடத்தில், மக்களின் ஆர்வத்தையும், அவைகளிடம் ஒரு தூய அன்பையும் பெருக்க உதவும் என்று இவ்விலாக்கா நம்புகிறது.

சென்னை,
1961-ம் ஆண்டு
செப்டம்பர் 11.

**C. A. R. பத்ரான், I.F.S.,**
பிரதம கான் காப்பாளர்.

# பொருளடக்கம்

கீழ்கண்டுள்ள தலைப்பைக் கொண்டு, இப் புத்தகத்தின்கண் வேடந்தாங்கல் பறவைகள் சரணலயத்தைப் பற்றி சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது :—

வேடந்தாங்கலிலுள்ள நீர்ப்பறவைகளின் வாழ்க்கை.

வேடந்தாங்கல் நீர்ப்பறவைக் காப்பு சாலையின் வரலாறு.

வேடந்தாங்கலில் கூடு கட்டும் பறவைகளைப் பற்றிய குறிப்புகள்.

இப் புத்தகத்தின்கண் பதிவாகியுள்ள புகைப் படங்களனைத்தும் வேடந்தாங்கல் சரணலயத்தில் பகற்பொழுதில் எடுக்கப்பட்டனவ.

இயற்கையழகில் எடுக்கப்பட்ட கீழ்கண்ட உற்சாகமூட்டும் காட்சிகளை இப்புத்தகத்தின்கண் காணலாம் :—

1. முன்பக்கம்—பெரிய வெண் கொக்கு.
2. தோப்பின் ஒரு மூலை.
3. கடப்பமரக் கிளைகளில் தங்கும் வளர்ந்த குஞ்சுகள். [நத்தைக் குத்தி, நாரை, கங்கணம், நீர்க்காக்கை].
4. நரையான் கூடுகட்ட வளார் கொண்டு வருதல்.
5. புரட்டாசி மாதத்தில் நத்தைக் குத்தி நாரைகள் வந்திரங்குதல்.
6. தோப்பின் நடுமரங்களில் நத்தைக் குத்தி நாரை, நரையான், வெண் கொக்கு.
7. நீர்க்காகம் கூடுகட்ட வளார் கொண்டுவருதல்.
8. நீர்க்காகங்கள்.
9. பாம்புத்தாரா.
10. சிறிய வெண் கொக்கு.
11. உண்ணிக் கொக்குகள்.
12. வயது வந்த வக்காக்கள்.
13. நரையான்.
14. நத்தைக் குத்தி நாரை.
15. துடுப்பு மூக்கு நாரை.
16. துடுப்பு மூக்கு நாரை.
17. இளம் வக்கா.
18. பின் பக்கம்—கங்கணங்கள்.



தோப்பின் ஒரு மூலை.

## வேடந்தாங்கலிலுள்ள நீர்ப்பறவைகளின் வாழ்க்கை

தென்னிந்தியாவில் கார் காலம் முதிர்ந்ததும் நீர்ப்பறவைகள் இனம்பெருக்கத் தொடங்குகின்றன. வக்கா, மடையான், கொக்குகள், நாரைகள், நீர்க்காகங்கள், முதலிய பல இனங்கள் சேர்ந்து ஓரிடத்திலேயே கூடுகட்டுகின்றன. அல்லது ஒன்றிரண்டு இனங்கள் மட்டுமே சிறு திரளாக ஓரிடத்தில் கூடுகட்டுகின்றன. அவ்விடத்தில் தங்களுக்கு இடையூறு எதுவும் நேரிடாவிட்டால், தலைமுறை தலைமுறையாக, நூற்றாண்டுகளாகக் கூட, அங்கேயே அவை இனம்பெருக்குவது வழக்கம்.

சென்னையிலிருந்து சுமார் 53 மைல் தூரத்தில், வேடந்தாங்கல் என்ற கிராமமிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள இந்த கிராமத்துச் சிற்றேரியின் இடையே அடர்ந்து வளர்ந்ததொரு கடப்பமரத் தோப்பு இருக்கிறது. "கடப்பமரம்" என்றால் கந்தனுக்கு வேண்டியதான கடம்ப மரமில்லை; சிலர் "அடம்பு" என்று குறிக்கும் (Barringtonia acutangula) மரமே; ஏறத்தாழ 20 அடி உயரமாகவும், பரந்து கிளைத்ததாகவும், சரம் சரமாய்த் தொங்கும் சிறு சிவப்புப் பூக்கள் செறிந்தும் இருக்கும். ஆண்டுதோறும், மழைகாலத்தில், ஏரியில் நீர் தேங்கி, தோப்பின் அடிமரங்களைச் சூழ்ந்து நிறைந்ததும் 14 வகை நீர்ப்பறவைகள் பெருங்கூட்டமாய் ஆயிரக்கணக்கில் கூடி நீர்மட்டத்தின் மேலுள்ள கொப்புகளில் நெருங்கிய முறையில் அடுத்தடுத்துக் கூடுகட்டி, முட்டையிட்டு குஞ்சுபொரித்து இனம் பெருக்குகின்றன. நெடுநாளாக, சுமார் இருநூறு வருஷங்களுக்குக் குறைவில்லாமல் இவை இந்தத் தோப்பிலேயே கூடுகட்டி வருகின்றன.

தென்னிந்தியாவில் வேறுசில இடங்களிலும் பலவகை நீர்ப்பறவைகள் ஒன்று சேர்ந்து கூடுகட்டுகின்றன. இருந்தாலும் வேடந்தாங்கலில் சுமார் 30 ஏக்கர் பரப்புள்ள தோப்பின் கிளைகளில் அவை திரண்டு கலந்து கூடுகட்டி நெருங்கி இணைந்து வாழும் காட்சியை வேறிடங்களில் எளிதில் காணமுடியாது. கரையிலிருந்து பார்த்தால், ஏரி நடுத்தோப்பு 100 அல்லது 200 மரங்கள் கொண்டதுபோலத் தோன்றும். உண்மையில் அது 550 மரங்களுக்கு மேல் அடங்கியது. அவை அடர்ந்து வளர்ந்திருப்பதாலும், அவற்றின் அடிமரங்கள் நீருள் மூழ்கியிருப்பதாலும், அதிகமான மரங்கள் இருப்பது தெரியவில்லை. மர உச்சிகளில் உள்ள பறவைகளின் பெருங்கூட்டத்தையும், நெருங்கிக் கட்டிய அவற்றின் கூடுகளையும், கரை மேட்டிலிருந்து ஒருமிக்கக் காணலாம். தவிரவும், பறவைகள் அவ்வப்போது இரைதேடப் பறந்து செல்வதையும், மறுபடியும் தோப்புக்குத் திரள் திரளாக வருவதையும் கரையிலிருந்து பார்க்கமுடியும்.

வேடந்தாங்கலில் இதுபோல் நீர்ப் பறவைகள் ஆயிரக்கணக்கில்கூடி இனம்பெருக்கி வாழ்வது காண்போர் மனதைக் கவரும் காட்சியாகும். இந்த வண்ணப்பறவைகளின் போக்கையும் இயல்புகளையும், உற்றுக் கவனிப்பவர்கள் மனதில் ஒருவித கிளர்ச்சியும் உற்சாகமும் பெறுகிறார்கள். இந்தியாவில்,

வேறிடங்களில், வேடந்தாங்கலைவிட மிகப்பெரிய நீர்ப்பறவை இனம்பெருக்கு தலங்கள் உள்ளன. ஆனாலும், மேலே குறிப்பிட்ட காரணங்களினால், வேடந்தாங்கலிலுள்ள நீர்ப்பறவைக் காப்பு சாலை தனிச் சிறப்பு வாய்ந்தது.

இந்தப் பறவைகள் ஏன் இப்படி ஆண்டுதோறும் வேடந்தாங்கல் ஏரி நடுத்தோப்பில் இனம்பெருக்க வேண்டும்? சுற்று மட்டும் எத்தனையோ ஏரிகள் உள்ளனவே? என்று கேட்கலாம். நீர்ப்பறவைகள் ஓரிடத்தில் கூடுகட்டத் தொடங்கினால் அவ்விடத்திலேயே இனம் பெருக்கிவருவது அவைகளின் இயல்பு. ஏதேனும் பெருந்தடை ஏற்பட்டால்தான் வேறிடம் தேடும், பறவைகள். குறிப்பாக நீர்ப்பறவைகள், நம்மைப்போல் அறிவையோ அனுபவ முதிர்ச்சியையோ நம்பி வாழ்வதில்லை; இயல்பூக்

கடப்ப மரக்கிளைகளில் தங்கும் வளர்ந்த குஞ்சுகள்.
[நத்தைக்குத்தி நாரை, கங்கணம், நீர்க்காக்கை]



கம்தான் அவைகளின் வாழ்க்கையில் முக்கிய அம்சம். ஆகையினல், இன்ன தறுவாய்களில் பறவைகள் இப்படி நடக்கக்கூடும் என்று அவற்றின் நடத்தையையும் இயல்பூக்கத் தூண்டுதல்களையும் கவனித்து நாம் சொல்லலாமேயொழிய, அவை ஏனப்படிச் செய்கின்றன என்று காரணத்தை விளக்க இயலாது. ஆனல், இனம்பெருக்க இடந்தேடும் நீர்ப்பறவைகள் சில வசதிகள் பொருந்திய இடங்களிலேயே கூடுகட்டும் என்று பொதுப்படையாகச் சொல்லலாம். அவை தம் குஞ்சுகளுக்கு வேண்டிய அளவில் இரைதேடிக் கொடுப்பது இலேசான பொறுப்பல்ல—ஒவ்வொரு குஞ்சுக்கும் தினமும் அதன் நிறையைக்காட்டிலும் அதிக அளவில் இரை தேடிக் கொண்டு தரவேண்டும். மீன்கள், தவளைக்குட்டிகள், நத்தைகள் முதலிய நீர்வாழ் சிற்றுயிர்களே இப்பறவைகளின் முக்கிய உணவு. மழைக்காலத்தில் இப்படிப்பட்ட இரை சதுப்புநிலங்களில் ஏராளமாகக் கிடைக்கும். வேடந்தாங்கலைச் சூழ்ந்துள்ள மருதநிலப் பகுதி தரிசான சதுப்பு நிலமாக இருக்கின்றது. நாலு மழை பெய்ததும் இங்கே எங்கும் நீர் தேங்கிநிற்கும்; கழனிகளில் மட்டுமில்லை, பள்ளங்களிலும் தாழ் நிலங்களிலும் நீர்தேங்கி, குளங்களும் குட்டைகளும் சிற்றேரிகளும் பெரும் ஏரிகளுமாக இருக்கும்; இவற்றில் கணக்கற்ற பூச்சிகளும், தவளைகளும், மீன்களும் தோன்றி இனம்பெருக்கும். மறுபடியும் கோடைகாலத்தில் இந்த நீரெல்லாம் வற்றி சேர் கடுந்தரையாகுமட்டும், இங்குள்ள நீர்ப்பறவைகளுக்கு உணவுக்குக் கவலையில்லை. இந்தக் காரணத்தால், கூடுகட்டிக் குஞ்சு பொரித்து இரைதேடும் நீர்ப்பறவைகளுக்கு வேடந்தாங்கல் மிகவும் வசதி வாய்ந்த இடமாகின்றது.

மேலும் பெருங்கூட்டமாகச் சேர்ந்து கூடுகட்டும் நீர்ப்பறவைகள், அடிமரம் தண்ணீரில் மூழ்கி நிற்கும் மரங்களைத் தேடுவது அவற்றின் இயல்பூக்க வழக்கமாகும். இதனால் அவைகளுக்குச் சில விதங்களில் பாதுகாப்பு ஏற்படுவது கவனிக்கத் தக்கது. நிலத்தில்வாழும் கீரி, பூனை முதலியவை நீர்சூழ்ந்த மரங்களை அணுக முடியாது; தவிரவும், மாடுகள் போன்ற பெரிய மிருகங்களும் தண்ணீரில் நீந்தி அந்தப் பக்கமாக வரமாட்டா, மனிதர்களும் அவைகளை லகுவில் நெருங்க முடியாது. ஆனல் இதையெல்லாம் எண்ணிப் பார்த்தே இப்பறவைகள் நீர் சூழ்ந்த மரங்களில் கூடு கட்டுகின்றன என்றே, நீர் சூழாத மரங்களில் கூடு கட்டுவதில்லை என்றே சொல்வதற்கில்லை.

இயல்பூக்கத் தூண்டுதலினால், கிடைத்தால் இத்தகைய மரங்களையே அவை நாடுகின்றன என்று மட்டும் சொல்லலாம். வேடந்தாங்கலின் அருகிலோ சற்று தூரத்திலோ உள்ள மற்ற ஏரிகளில் (இவற்றுள் அடுத்தாற்போலிருக்கும் மதுராந்தகம் ஏரியே மிகப் பெரியது) நடுவில் ஒரு தோப்போ சில மரங்களோ கிடையாது—இதுவும் கவனிக்கத் தக்கது. நம் நாட்டில் வேறிடங்களில் மழைகாலத்தில் நீரில் நிற்கும் கருவேல மரங்களிலும், ஆற்றங்கரையோரமாகவுள்ள தாழைப்புதர்களிலும் நீர்ப்பறவைகள் கூடு கட்டுவதுண்டு—வேடந்தாங்கலில் அவைகளுக்கு இதுபோல் உதவுவது நெடுநாள் வழங்கி முதுமையடைந்த கடப்பமரங்களே.

நரையான் கூடுகட்ட வளார் கொண்டுவருதல்.



இன்னுமொன்றையும் இங்கேயே சொல்லிவிடலாம். ரஷ்யா முதலிய தூரதேசங்களிலிருந்து நீர்ப்பறவைகள் வேடந்தாங்க லுக்கு வந்து அங்குள்ள கடப்பமரத் தோப்பில் இறங்கி கூடு கட்டுகின்றன என்றும், பல்லாயிரம் மைல்களையும் பல கடல்களை யும் கடந்து இனம் பெருக்க அவை இங்குதான் வருகின்றன என்றும், இந்த ஊருக்கு இதுதனிப் பெருமை ஆகும் என்றும் அநேகர் சொல்கிறார்கள். இது பூராவும் உண்மை அல்ல.

நமது நாட்டில் மாரிக்காலமாகவும் குளிர்மிகுந்த வடதேசங் களில் வெண்பனிக்காலமாகவும் இருக்கும்போது, குள்ள வாத் துக்களும், உள்ளான் வகைகளும், சிலவகை வாலாட்டிக் குருவி களும், வேறு சில பறவைகளும், அந்த தூரதேசங்களிலிருந்து புறப்பட்டு தெற்கேயுள்ள வெப்ப நாடுகளுக்கு வந்து அங்கு சில மாதங்கள் தங்கியிருக்கும். பிறகு, கோடைகாலம் வந்ததும் மறு படியும் நெடும்பயணம் தொடங்கி வடக்கேயுள்ள தமது சொந்த நாடுகளை அடைந்துவிடும். அந்த வகையில் அநேக வகைப் பறவைகள் நம் நாட்டிற்கும் இதுபோல் வந்து போவதுண்டு; தவிரவும், இவை பெரும்பாலும் நீர்ப்பறவைகளானதால் நம் நாட்டில் சில மாதகாலம், சதுப்பு நிலங்களிலும், குளங்களிலும், ஏரிகளிலும், நீர் மீதும் கரைமீதும், சஞ்சரிக்கும். சென்னையிலும் சுற்றுப்புற பகுதிகளிலுமுள்ள பல நீர்மிகுந்த இடங்களில் இந்த வாலாட்டி, உள்ளான், போன்ற வகைகளைப்பார்க்கலாம்—வேடந் தாங்கலிலும் இவைகளைப் பார்க்கலாம். ஆனால் இவை ஒன் றேனும் நமது தேசத்தில் கூடு கட்டுவதில்லை—தங்கள் சொந்த இடமாகிய குளிர்மிகுந்த வடதேசங்களில் இனம்பெருக்கிய பின்பே அவை தெற்கே பறந்து இங்கு வருகின்றன. இப் படி ஆண்டுதோறும் ஸைபீரியா முதலிய வடதேசங்களிலிருந்து எத்தனையோ ஆயிர மைல்கள் கடந்து தெற்குள்ள நாடுகளுக்கு வந்து, சில மாதங்கழித்து மறுபடியும் வடக்கு நோக்கிச்சென்று வீடு திரும்புவது மிகவும் விந்தையளிக்கக்கூடிய விஷயமே. இதைதான் தமிழில் பறவைகள் "வலசை போதல்" என்று குறிப்பிடுகிறார்கள். வலசை வந்த பறவைகளில் அநேகவகை களை தமிழ் நாட்டில் பலவிடங்களில் பார்க்கலாம். இவற்றுள் சில வேடந்தாங்கலுக்கும் வருவதில் வியப்பில்லை.

அப்படியானால் மேற்குறித்த கதைக்கு ஆதாரமென்ன, என்று கேட்கலாம். கதைக்குக் காரணம் தேவையில்லை. ஆனாலும், இந்தக் கதைக்கு ஒருவித ஆதாரமுண்டு. சுமார் 20 வருஷங்கள்



புரட்டாசி மாதத்தில் நத்தைக்குத்தி நாரைகள் வந்திறங்குதல்.

முன்பு வேடந்தாங்கலில் கிளுவை வேட்டையாடுகையில் (அப்போதும் இது நீர்ப்பறவை காப்பு சாலையாகத்தான் இருந்தது), குண்டுபட்டு விழுந்த கிளுவையொன்றின் காலில் ஒரு காப்புப் பூட்டப்பட்டிருந்தது. அந்தக் காப்பில் 'மாஸ்கோ' என்று ரஷ்யாவின் தலைநகரின் பெயர் பதிக்கப்பட்டிருந்தது.

பறவைகளின் போக்கை ஆராயும் நிபுணர்கள் வலசை போகும் பறவைகளின் கால்களில், அவை குஞ்சுகளாயிருக்கும் பருவத்திலேயே இதுபோன்ற காப்புகளைப் பூட்டுவார்கள்; காப்புகளில், அந்த ஊரின் பெயர் பதிக்கப்பட்டிருக்கும். இப்படி காப்பிடப்பட்ட ஒரு பறவையை அயல் நாட்டில் சுட்டுக்கொன்றால், இன்னவிடத்தில் அது சுடப்பட்டது என்ற

குறிப்புடன் காப்பை அதில் குறித்துள்ள ஊருக்கு அனுப்புவது வழக்கம். இதனுல், குளிர்ந்ததேசங்களேச் சேர்ந்த பறவைகள் எந்தெந்த நாடுகளுக்கு வலசை போகின்றன என்பது விளங்கும், தென்னிந்தியாவில் இதுபோல் காப்பணிந்த பறவைகள் எத்தனேயோ சுடப்பட்டிருக்கின்றன.

வேடந்தாங்கல் ஏரியிலேயே மீன் போன்ற இரை வகைகள் ஏராளமாகவிருப்பதால், இங்கு கூடு கட்டாத பறவையினங்கள் சிலவும் ஏரிக்கு வருவதுண்டு; அவை இங்கேயே சிலநாட்கள் தங்குவதுமுண்டு. மேலும், இங்கு கூடுகட்டும் கொக்குகள் முதலிய வகைகளிலும், சில பறவைகள் இனம்பெருக்காது இருக்கலாம். தோப்பின் மரங்கள் கூடுகட்டுவதற்கு மட்டுமில்லே, இவைகளுக்கு அடைமரங்களாகவும் உதவுகின்றன.

வேடந்தாங்கலில் அவ்வப்போது காணப்படும் வலசைவரும் அயல்நாட்டுப் பறவைகளில் முக்கியமானவை கிளுவைகள்,வாலாட்டிக்குருவி, சில உள்ளான் வகைகள் ஆகியனவாகும். இங்கு கூடுகட்டாது இரைதேட மட்டும் வரும் உள்நாட்டு நீர்ப்பறவைகளில் முக்கியமானவை பவளக்காலி (Blackwinged stilt). இவைகளேக் கரையோரமாக, கிராமத்துப் பக்கமுள்ள கரையருகில், சிறு கூட்டங்களில் காணலாம். சிற்சில வேளேகளில் இங்கு கூழைக்கடா (Spottedbilled pelicans) வந்து சில நாள் தங்குகிறது. வேடந்தாங்கலில் இவைகளே "மத்தாளி", "மத்தாளிக் கொக்கு", என்றழைக்கிருர்கள். "நாமக்கோழி" எனப்படும் வெள்ளே நாமம் தீட்டிய கரு நீர்க்கோழி (Coot), நீர் மட்டத்தை உற்று நோக்கியவாறே அதன்மேல் பறந்தலேயுமோர் உப்புக்குருவி (River Tern) ஆகியவைகளேயும் இங்கு பார்க்கலாம். வேடந்தாங்கலில் கூடுகட்டும் இனங்களேச் சேர்ந்தனவாக இருந்தும் இனம்பெருக்காது இங்கு சஞ்சரிப்பவைகளில் குறிப்பிடத்தக்கவை வெண்கொக்குகள், உண்ணிக்கொக்கு, மடையான், ஆகியனவாகும். இவை கார்காலம் கழிந்தபின் கடப்பமரத் தோப்பில் கூடுகட்டி இனம்பெருக்குவது சகஜம். கடப்பமரக் கிளேகளில் இல்லாது, மரங்களடியிலும் கரையோரமாகவும் ஏரியில் நீந்தி வளேயவரும் முக்குளிப்பான் (Dabchick), நீர்க்கோழி (Indian Moorhen) இவைகளே இங்கு சாதாரணமாக காணலாம்.



தோப்பின் நடுமரங்களில் நத்தைக்குத்தி நாரை, நரையான், வெண்கொக்கு.

இத்தனை நெருக்கமாகவும் பெரும் கூட்டமாகவும் நீர்ப்பறவைகள் கூடுகட்டியிருக்குமிடத்தில், முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும், இனம் பெருக்கும் பறவைகளுக்குங்கூட, அவ்வப்போது சேதம் ஏற்படுவது உண்டு. சில பிணந்தின்னிகளும் வழிப்பறிக்காரரும் வேடந்தாங்கலில் இருப்பது இயற்கையே. காக்கைகளை (அதாவது சாதாரண, ''சாம்பற்கழுத்துக்'' காக்கைகளை) கரைமீதும் தோப்பிலும் எப்போதும் பார்க்கலாம்; பருந்துகளும் கருடன்களும் ஏரியைச் சுற்றியும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அவ்வப்போது மஞ்சுதிருடி (Lesser white Scavenger Vulture), கூளி (Shart-toed Eagle), பூனைப்பருந்துகள் (Harriers), ஆகிய வற்றையும் இங்கே காணலாம்.

வேடந்தாங்கலில் காணக்கூடிய நீர்பறவையினங்கள் பற்றி இதுவரை சொல்லப்பட்ட விவரம் ஒரு சிறு பகுதியே ஆகும், இந்தக் காப்புசாலைக்குச் சிறப்பளிப்பவை, இங்கு ஆயிரக் கணக்கில் கூடி இனம் பெருக்கும் வண்ணப்பறவைகளேயாகும். அவற்றுள் 14 வகைகள் உண்டென்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது, அந்த 14 வகைப் பறவைகள் வருமாறு :—சிறியது, நடுத்தரமானது, பெரிது என்று மூன்று வகைப்பட்ட நீர்க் காகங்கள் (Cormorants); நீர்க்காகங்களுக்கு எட்டின முறையில் உறவான பாம்புத்தாரா (Darter); சிறியது, நடுத்தரமானது, பெரிது என்று மூன்று வகைப்பட்டிருக்கும் வெண் கொக்குகள் (Egrets); உண்ணிக்கொக்கு— இதை "மாட்டுக்கொக்கு" (Cattle Egret) என்போருமுளர்; மடையான் (Pond Heron);

நீர்க்காகம் கூடுகட்ட வளார் கொண்டுவருதல்.



வக்கா (Night Heron); நரையான் (Grey Heron); நத்தைக் குத்தி நாரை (Openbilled stork); துடுப்புமூக்கு நாரை (Spoonbill)—இதை வேடந்தாங்கலில் "மண்வெட்டிவாயன்" என்கிருர்கள்), கங்கணம் (W ite Ibis—இதை வேடந்தாங்கலில் "அரிவாள் மூக்கன்" என்கிருர்கள்); ஆகமொத்தம் பதினு ன்கு வகைகள்.

இவற்றுள் நீர்க்காக்கைகள் கருப்பானவை; வக்கா, நரையான், நத்தைக்குத்தி நாரை இவை மேல்பாகம் சாம்பல் நிறமானவை; கொக்குகள், துடுப்புமூக்கு நாரை, கங்கணம் இவை வெள்ளை யானவை. இவையெல்லாம் அடுத்தடுத்துக் கூடுகட்டி, கிளைகளில் பெருங்கூட்டமாக இனங்கலந்து கூடியிருப்பதைக் கரையினின்றும் பார்த்தால், அரியதோரு வண்ணக் கலவை தென்படும். நீர்மட்டத்துக்கு மேலிருக்கும் இலை செறிந்த கிளைகளில் பச்சை இலைகள் தென்படாது. கருப்பாகவும், வெள்ளையாகவும், சாம்பல்

நீர்க் காகங்கள்.





பாம்புத்தாரா.

நிறமாகவுமே மரங்களின் மேல்பாகம் காட்சி அளிக்கும்! அவை பச்சை இலை மரங்களாக இல்லாமல் வண்ணப் பறவைகளை இலைகளாய்க் கொண்ட மரங்களாகத் தென்படும்!

இவை கூடுகட்டுவதில், ஓரினம் ஒரு மரத்திலும் மற்றவை மற்ற மரங்களிலும் என்று பாகுபாடு காட்டுவதில்லை. சேர்ந்தே வாழ்கின்றன. பல இன ஜாதிகளும் ஒவ்வொரு மரத்திலும் கலந்து கட்டியிருப்பதால், தோப்பின் தோற்றம் கலப்படமாகவே யிருக்கும். ஆனாலும், சில மரங்களில் சில இனங்களே பெரும்பான்மையாக இருப்பதைக் கவனிக்கலாம். கரைமேட்டு நடுவிலிருந்து(படிபோல் செதுக்கிவிட்டிருக்கும் இடத்திலிருந்து) பார்த்தால், தோப்பின் வடமேற்காகவுள்ள மூலை மரங்களில் (கிராமத்தைப் பார்த்தாற் போலிருக்கும் மரங்களில்) சாம்பல்



சிறிய வெண் கொக்கு.

நிறமான நத்தைக்குத்தி நாரைகளும், நரையான்களும் விசேஷ மாகவிருப்பது விளங்கும்; நேரெதிராகவுள்ள மரங்களில் வெண்கொக்குகளும், துடுப்புமூக்கு நாரைகளும், நீர்க்காகங் களும் அதிகமாக தென்படும். பாறைகள் கொண்ட தோப்பின் தென்மூலை மரங்களே வக்காக்களின் தாய்வீடு. அவை இலை மறைவாகப் பதுங்கியிருப்பதால் சற்று உற்று நோக்கினுல் தான் அவற்றின் இருப்புப் புலப்படும்.

ஆவணி மாதத்தில் நல்ல மழையிருந்தால், புரட்டாசிக்கு முன்பாகவே பறவைகள் வேடந்தாங்கலின் கடப்பந்தோப்பில் வந்திறங்கத் தொடங்கும். ஒவ்வொரு இனமும் சிறுதிரளாக வும் பெருந்திரளாகவும் வந்திறங்கும். ஓரினத்தைச் சேர்ந்த அத்தனை பறவைகளும் ஒருமிக்க இங்கு வருவதில்லை. மேலும்

முதன் முதலாக நத்தைக்குத்தி நாரைக்கூட்டமொன்று வந்து தோப்பின் புறவட்டத்தில். கரையை நோக்கி நிற்குமொரு மரத்தில் (இங்குள்ள மரங்களைச் சூழ்ந்தே ஏரியில் நீர் முதலில் தேங்கும்) இறங்கிஞல், அடுத்தாற்போல் வரும் நீர்க்காக்கை களும் அதே மரத்தில் குடியேறலாம். இதுபோல எல்லாப் பறவை களும் வந்தடைவதற்கு சுமார் ஒருமாத காலம் பிடிக்கும். சில இறங்கினதுமே கூடுகட்டத் தொடங்கலாம். மற்றவை சிலநாள் தங்கி, தங்கள் இச்சை தீர இரைதேடியுண்டு, பிறகு கூடுகட்டு கின்றன.

இந்த நீர்ப்பறவைகள் மற்றபறவைகள் கூடு கட்டுவதுபோல், தோற்ற நயமும், முடைநயமும், மெல்லிய நார் பஞ்சு முதலியன கொண்டமைத்த மென்மையான கூடுகள் கட்டுவதில்லை.

உண்ணிக் கொக்குகள்.



பலவிதமான உலர்ந்த குச்சிகளைப் பிணைத்து, சுள்ளியடுச்குப் போன்ற முரடான கூடுகளையே கட்டுகின்றன; தவிரவும், கூடு கட்ட இவைதேடும் குச்சிகள் அநேகமாய்ப் பெருமுட்கள் கொண்டன—இவற்றுள் களா, இலந்தை, வெள்வேலன் ஆகியவை முக்கியமானவை. அவ்விடத்திலேயே கிடைக்கக்கூடிய கடப்பமரக் குச்சிகளை இவை உபயோகிப்பதில்லை—நத்தைக் குத்தி நாரை மட்டும் வெகுசில கடப்பமர சிறு கிளைகளை இது போல் உபயோகிக்கலாம். தமக்கு வேண்டிய வளார்களை, சுற்றுமட்டுமுள்ள புதர்க்காடுகளில் தேடி எடுத்து, அலகில் கப்பி ஒவ்வொன்றாய்க் கொண்டுவந்தே இவை கூடுகட்டுகின்றன. ஒவ்வொரு கூட்டிலும் நூறுலிருந்து முன்னூறு குச்சிகள் மட்டும் இருக்கலாம்; மேலும், இவற்றுள் பல சற்று தூரத்தி லிருந்தே கொண்டு வரப்படுகின்றன. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்த பின்னும், அவ்வப்போது தமது கூடுகளைச் செப்பனிட முள்ளடர்ந்த வளார்களை இவை கொண்டுவருகின்றன.

வேடந்தாங்கலில் மொத்தம் எத்தனை நீர்ப்பறவைகள் இருக் கக்கூடும் என்று உறுதியாகக் கூறுவது இயலாத காரியம். மாலையில் பறவைகள் கூட்டம் கூட்டமாய் வரும்போது, ஏதோ லக்ஷக்கணக்கில் அவை இங்கிருப்பதாகத் தோன்றலாம்; நண் பகலில் பல பறவைகள் இரைதேடிச் செல்ல, தோப்பிலிருப்பவை சற்று இலைமறைவாக ஒளிந்திருக்கும் போது, சில நூறு பறவைகளே இருப்பதாக எண்ணலாம். தவிரவும், வானம் பார்த்த சீமைவிளை நெல்லைப்போல, இங்கு இனம் பெருக்கும் பறவைகளின் தொகையும் செழிப்பும் கூடுகட்டும் ஊக்கமும் மழையைப் பொருத்ததே. புரட்டாசி மாதத்தில் மழை குறைந்து, பிற்பாடும் அடைமழையாகப் பெய்யாமல் அவ்வப்போது லேசாகத்தூறி மழைகுன்றிய ஆண்டுகளில், நீர்ப்பறவைகள் மிகச் சிலவே இங்கு கூடுகட்டலாம். எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுப் பார்த்தால் பருவகால மழை வாய்ந்த வருஷங்களில், குஞ்சுகள், இனம் பெருக்காது தங்குபவை எல்லாம் உட்பட, தோப்பில் சுமார் ஆறுயிரம் பறவைகள் அடைந்திருப்பதாக மதிப்பிடலாம்.

இங்கு திரண்டிருக்கும் பறவைகளில், வக்கா, சிறிய நீர்க் காகம், சிறிய வெண்கொக்கு இவைகளே தொகைமிகுந்தவை களாகத் தென்படுகின்றன. அடுத்தாற்போல் தொகை மிகுந்துள்ளவை நத்தைக்குத்திநாரை, நரையான், துடுப்புமூக்கு



வயது வந்த வக்காக்கள்.

நாரை, உண்ணிக்கொக்கு, கங்கணம், மடையான் ஆகியவை. பெருவகை [வெண்கொக்கு, பாம்புத்தாரா சில ஜதைகளே இங்கு குடியேறுகின்றன; பெரிய நீர்க்காகம் இங்கு அரிது.

இந்தப் பறவைகளெல்லாம் நம் நாட்டை, அதிலும் வேடந்தாங்கலைச் சார்ந்தனவே. இவற்றுள் வெண்கொக்கு, நீர்க்காகங்கள், பாம்புத்தாரா, வக்கா, துடுப்புமூக்குநாரை போன்றவை இந்தியாவின் பக்கத்திலுள்ள வேறு தேசங்களிலும் குடியிருக்கலாம், சில தூர தேசங்களிலும் இருக்கலாம். ஆனல், வேடந்தாங்கலில் கூடுகட்டும் பறவைகளனைத்தும் அந்தவூரைச் சார்ந்தனவே.

நம்முள், ஒருவன் பிறந்து வளர்ந்த இடத்தையே அவன் தன் "ஊர்" என்று கொண்டாடுகிருன்—மேலும், பல தலைமுறைகளாக அவன் மூதாதையரும் அங்கேயே பிறந்து

வளர்ந்திருந்தால், அந்தவூரைக் கட்டாயமாக அவன் சொந்தம் பாராட்டுவான். பறவை வாழ்க்கை நிபுணர்களும், ஒரு பறவை இனம் பெருக்கிப் பிறந்து வளர்ந்த இடமே அதன் சொந்த இடம் என்று கொள்கிருர்கள். ஆகையால், வேடந்தாங்கலில் இனம் பெருக்கும் பறவைகள் எல்லாம் அந்த ஊர்ப் பறவை களே என்பதில் சந்தேகம் சிறிதுமில்லை. இங்கு கூடுகட்டுமொரு பறவையினம், இலங்கையிலோ, சீனவிலோ, ஐரோப்பாவிலோ வசித்து வந்தாலுமென்ன? அல்லது அமெரிக்காவில் வசித்தால் தான் என்ன? அந்தந்த தேசத்தில் வாழ்ந்து இனம் பெருக்கு வது அந்த தேசத்தைச் சார்ந்தது, இது வேடந்தாங்கலைச் சார்ந்தது, மனிதர் எல்லாரும் ஓரினத்தவரே; ஆயினும் அவர்கள் பல தேசங்களில் வாழ்ந்து, பலவிதமாகத் தமது தேசத்தையும் ஊரையும் பாராட்டுவதில்லையா? அதுபோலவே தான் பறவைகளும்.

முடிவாக ஒரு விஷயம். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தான் வேடந்தாங்கலிலுள்ள பறவைகள் பெருப்பாலும் கூடு கட்டுகின்றன—சில கூடுகளில் கார்த்திகையிலேயே குஞ்சுக ளிருக்கும். தை மாதத்துக்குள் அநேகமாய் எல்லா முட்டை களும் பொரித்துக் குஞ்சுகள் செழித்து வளர்ந்துகொண்டிருக் கும். "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்" என்ற முதுமொழி நீர்ப்பறவைகளின் குஞ்சுகளுக்கே முற்றிலும் பொருந்தும்—அத்தனை விரைவாக அவை வளரும்! பங்குனி வெயில் முற்றுமுன், குஞ்சுகள் பெரிதாகி நன்ருகப் பறக்கும் திற மையடைந்து, குஞ்சுகளும் வயதுவந்த பறவைகளுமாய் வேடந் தாங்கலை விட்டுப் போய்விடும், சித்திரை மாதப் பிறப்பன்றும் இங்கு சில பறவைகளைப் பார்க்கலாம். ஆனல், அம்மட்டும் ஒரு நூறு பறவைகளும் இங்கு தங்குவதில்லை—ஏரியில் தண்ணீர் முழுதும் வற்றிவிட்டால் இவைகளும் இங்கிருப்பதில்லை. ஆயிரக் கணக்கில் கூடுகட்டின பலவகைப் பறவைகளும், ஆயிரக் கணக்கில் இங்கு பிறந்து வளர்ந்த குஞ்சுகளும் வேடந்தாங்கலை விட்டு எங்கு செல்கின்றன?

இந்தக் கேள்விக்கு திடமாகவும் விவரமாகவும் பதிலளிக்க முடியாது. வேடந்தாங்கல் ஏரியில் நீர் வற்றி, சுற்றுப்புற முள்ள குளங்களும், குட்டைகளும், சிற்றேரிகளும் வற்றி, சதுப்பு நிலமும், தேங்கிநிற்கும் நீரும் கடுந்தரையாக மாறிவிடவே, தங்களுக்கு வேண்டிய இரை கிடைக்காமல், மீன்களும், தவளை



நரையான்.

களும், நத்தைகளும், மற்ற நீர்வாழ் சிற்றுயிர்களும் இருக்குமிடந் தேடி, ஆறுகளும், கால்வாய்களும், ஏரிகளுமுள்ள இடங்களுக்குப் பறவைகள் பறந்துவிடுகின்றன. என்றே சொல்லலாம். வேடந் தாங்கலுக்கு அருகேயுள்ள நீர்த்துறைகளில், சில இனங்களைக் கோடைகாலத்திலும் பார்க்கலாம்—வக்கா, மடையான், கொக்கு வகைள் ஆகியவை வேடந்தாங்கலை விட்டு இவ்விடங்களில் வந்து தங்கியிருக்கலாம். நத்தைக்குத்தி நாரை, துடுப்புமூக்கு நாரை, நீர்க்காகங்கள், பாம்புத்தாரா முதலிய வகைகளை அருகிலுள்ள இடங்களில் காணமுடியாது; இவை வேடந் தாங்கலை விட்டதும் தூரத்திலுள்ள ஆறுகளுக்கும் ஏரிகளுக் கும் செல்கின்றன எனத் தோன்றுகிறது; இறக்கை வலிமை

வாய்ந்த இப்பறவைகளுக்கு நூறு இருநூறு மைல்கள் எளிதில் கடக்கக்கூடிய தூரமேயாதலால், இவை தூரப்பகுதிகளுக்குச் செல்வதில் ஆச்சரியமில்லை. ஆனால் இதை இன்னவிடங்களுக்கே செல்கின்றன என்று குறிப்பாய்ச் சொல்ல நம்மால் இப்போது முடியாது. அவற்றின் வரவையும் போக்கையும் மேலும் கூர்ந்து கவனித்தே நாமிதைக் கண்டுபிடிக்க முடியும்.

## வேடந்தாங்கல் நீர்ப்பறவைக் காப்பு சாலையின் வரலாறு

வேடந்தாங்கலில் சுமார் இருநூறு வருஷங்களுக்கு மேலாகவே ஆண்டுதோறும் நீர்ப்பறவைகள் இனம்பெருக்கி வருகின்றன. மனிதர் பாதுகாப்பின்றியே இவை இத்தனை காலமாக இவ்விடத்திலேயே கூடு கட்டவில்லை. தென்னிந்தியாவில் பலவிடங்களில் ஒரு கிராமத்திலோ அதை அடுத்தோ நிற்கும் மரங்களிலோ பறவைகள் கூடுகட்டினால், பிறரால் எவ்விதக் கேடும் விளையாதபடி கிராமவாசிகள் அவைகளைக் காப்பாற்றி வருவது பழங்கால வழக்கம். இந்த வழக்கத்துக்குத் தன்னலம் ஒரு காரணமில்லை; இனம் பெருக்குங் காலத்தில், மனிதரிடமிருந்து தப்பமுடியாமல் பறவைகள் குஞ்சுங்கூடுமாக வலிவற்றிருக்கும் காலத்தில், அவற்றைக் காப்பது தமது கடமை என்று மக்களிடையே வழங்குமொரு ஜீவகாருண்யக் கொள்கையே இதற்கு ஆதாரம். வேடந்தாங்கல், விஷயத்தில் இந்தக் கொள்கை மட்டுமின்றி, இங்கு பெருந்தொகைகளில் தோப்பில் கூடுகட்டும் பறவைகளைக் காக்க வேறு ஒரு காரணமும் உண்டு.

இத்தனை பறவைகளின் எச்சமும் ஏரியில் விழுவதால், சுற்று மட்டுமுள்ள வயல்களுக்குப் பாய்ச்சப்படும் இந்த ஏரிநீர் நெடுங்காலமாக பயிர்களுக்கு சிறந்த எருவாகவும் உதவிவருகிறது. இந்தப் பறவையெச்சம் கொண்ட நீர், பயிர்களுக்கு நல்ல செழிப்பளித்து, வயல்களில் இருபோகம் முப்போகமும் விளைகின்றது. இக்காரணத்தால் ஊரார் பறவைகளுக்கு ஏதேனும் அபாயம் ஏற்பட்டு அவை பயந்து தம்மூரை விட்டுச் சென்றுவிடாதபடி, நெடுங்காலமாக அவைகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

இதை மேலும் விளக்குமுன், வேடந்தாங்கல் என்று ஏனிந்த ஊருக்குப் பெயர் வந்தது என்பதை சிறிது ஆராயலாம் இதைக் குறித்து சமீபகாலத்தில் பலரும் பலவிதமாகச் சொல்லியிருக்



நத்தை நக்குத்தி நாரை.

கிருர்கள். இது "வேடன்" "தாங்கல்" என்ற இரு பதங் கொண்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது. "தாங்கல்" என்ற சொல் "தங்கல்" என்பதின் திரிபென்றும். முன் காலத்தில் "வேடன்" என்றழைக்கப்பட்ட பறவையொன்று (இது இன்ன பறவை என்பது யாருக்கும் தெரியாது) இங்கு கூடுகட்டி வந்ததால் இந்தப் புராதனப் பறவை தங்கிவந்த "வேடந்தங்கல்" தான் "வேடந்தாங்கல்" ஆக மாறிவிட்ட தென்று சிலர் சொல்லியிருக்கிருர்கள்! இந்த விளக்கத்தை தமி ழறிந்தவர் எவரும், நமது பறவைகளை அறிந்தவர் எவரும், ஒப்ப மாட்டார்கள். "தாங்கல்" என்ற சொல் ஒருபயோகத்தில் பாதுகாத்தலைக் குறிக்குமாதலால், வேடர்களிடமிருந்து பறவை

களை ஊரார் காத்த இவ்விடத்திற்கு இப்படிப் பெயர் வந்தது என்று சிலவருஷங்களுக்கு முன் காரணம் கற்பித்ததும் பொருத்த மற்றது. அப்படியானுல் இவ்விடம் வேடர்களுக்கு இடங் கொடுத்து அவர்களைக் காத்த இடமாகவிருக்க வேண்டும்! உண்மை எளிதில் விளங்குகையில், இப்படி வக்கிரமாக இந்த ஊரின் பெயருக்குக் காரணந்தேடுவதற்குக் காரணம் எதுவு மில்லை! ' தாங்கல்" என்ற சொல் ஊரையடுத்த தடாகத் தையோ குளத்தையோ குறிக்கும்—இப்படித் தடாகங்கொண்ட பல மருதநில ஊர்களுக்கு "தாங்கல்" என்ற முடிவுடன் நெடு நாளாய் பெயர் வழங்கி வருவதை நிரூபிக்கச் செங்கல்பட்டு மாவட்டத்தை விட்டு வெளியே செல்லவேண்டாம். தாம்

துடுப்பு மூக்கு நாரை.





துடுப்பு மூக்கு நாரை.

பரத்தின் அருகிலுள்ள பளவந்தாங்கல் அநேகருக்குத் தெரிந் திருக்கலாம். வேடந்தாங்கலை அடுத்தாற் போலுள்ள மூன்று சிற்றூர்களுக்கு 'சின்னத்தாங்கல்,' 'பெரியத்தாங்கல்', 'முனியந்தாங்கல்' என்று பெயர் ஆனலும் 'வேடன்' என்ற சொல் இந்த ஊர்ப் பெயரில் வருவானேன் என்று கேட்கலாம். தமிழ்நாட்டில் பல ஊர்கள் ராமாயணக் கதையினின்றும் பெயர் கொண்டிருப்பதை விளக்க வேடந்தாங்கலுக்கு வெகு சமீபத்திலுள்ள 'சித்திர கூடம்' என்ற ஊரே போதும். 'வேடந்தாங்கல்' என்ற பெயரில் குறித்த வேடன், ராமாயணக் கதையில் சித்திரகூடத்தில் வசித்த வேடர் தலைவ ஞகிய குகனே என்று வைத்துக் கொள்ளலாம். இது நிற்க, இங்குள்ள நீர்ப்பறவைக் காப்பு சாலையின் வரலாற்றை சற்று விரித்து உரைப்பதும் அவசியமாகும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வேடந்தாங்கல் எப்படியிருந்தென்று விவரிக்கும் குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கி. பி. 1798-ஆம் வருஷத்தில், ஏற்கெனவே இந்த ஊரின் ஏரி நடுவில் ஒரு கடப்பமரத் தோப்பு இருந்தது. அதிலடைந்து கூடுகட்டும் நீர்ப்பறவைகளை ஊரார் காத்துவந்தார்கள் என்பவைகளைக் காட்டப் போதுமான அத்தாட்சி இருக்கிறது. அப்போது, செங்கற்பட்டு மாவட்டத்துக்கு முதல் கலெக்டராக நியமிக்கப்பட்டவர் லயனல் ப்ளேஸ் ஆவார். இவர் சில அரிய காரியங்களைச் செய்தவர். மதுராந்தகத்துப் பெருமேரியைக் கட்டியவரும், அவ்வூரிலுள்ள பிராட்டியார் கோயிலைச் செப்பனிட்டு உதவியவரும் இவரேதான். வேடந்தாங்கல் கிராமத்தோரின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்கள் கிராமத்துக் கடப்பந்தோப்பில் கூடுகட்டும் பறவைகளைப் பிறர் வந்து வருத்தாமல் காப்பாற்ற அவர்களுக்கு உரிமையுண்டென்று விளக்குமொரு கவுலை, இவர் அவர்களுக்கு அளித்தார். இந்தப் பத்திரம் கைமறதியாக வைக்கப்பட்டுத் தொலைந்து போய்விட்டது. பிறகு, கிராமவாசிகள் தொலைந்துபோன கவுலைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவே செங்கற்பட்டு உதவி மாஜிஸ்திரேட்டாக இருந்த ஜி. பி. டாட், 1858-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ந் தேதி அன்று பின்வருமாறு ஒரு கவுலை அளித்தார்—இதை இன்றைக்கும் காணலாம் :—

"கருங்குழி தாலூகாவைச் சார்ந்த வேடந்தாங்கல் கிராமத்தாருக்குக் கொடுத்த கவுல் என்னவென்றால்,

"உங்கள் கிராமமாகிய மேற்குறித்த வேடந்தாங்கல் ஏரியிலிருக்கின்ற கடப்ப மரங்களில் நானாவித பக்ஷி சாதிகள் அனாதியாய் வாசஞ்செய்வதாயும் அவைகளை ஒருவருஞ் சுடாமலும் பிடியாமலுமிருக்கும் பொருட்டு முன்னாலேயே மேஸ்தா ப்ளேஸ் துரையவர்கள் கவுல் கொடுத்ததாயும் அது கை சோர்ந்து போனதாயும் அதற்கு பதில் வேறு கவுல் கொடுக்கவேண்டுமென்றும் நீங்கள் நம்மைக் கேட்டுக்கொண்டமையால் அந்தப்படி இதை உங்களுக்குக் கொடுக்கலாயிற்று.

"யாராவது துரைகளாவது வேட்டைக்காரர் முதலியவர்கள் மேற்குறித்த உத்திரவுக்கு விரோதமாய் மேற்குறித்த ஏரி வந்து மேற்குறித்த பக்ஷிகளை சுட அல்லது பிடிக்க எத்தனப்படுவார்களேயாகில் அவர்களுக்கு இதை காண்பித்து அப்படி செய்ய ஒட்டாமல் தடுத்துப் போட வேண்டியது அறியவும்."

பிறகு, 1836-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதியன்று செங்கற்பட்டு கலெக்டராக இருந்த ஏ. எச். ஏ. டாட் வெளியிட்ட ஒரு உத்திரவில் நூறு வருஷங்களுக்கு மேலாகவே வேடந்தாங்கல் ஒரு நீர்ப்பறவைக் காப்புசாலையாக ஊரார்களால் நிலை நிறுத்தப்பட்டது என்றும், இதை அரசாங்கத்தார் பறவைக் காப்புசாலையாக மதித்து அதற்கு வேண்டிய விதத்தில் விளம்பரம் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார்.

வேடந்தாங்கலில் யாரும் பறவைகளைச் சுடக்கூடாது. அது மட்டுமில்லை, வேடந்தாங்கலிலிருந்து 20 மைல் சுற்றளவுக்குள்ளாகவும் நீர்ப்பறவைகளை எவரும் சுடக்கூடாது என்று சமீபத்தில் அரசாங்கம் கட்டளையிட்டிருக்கிறது. தவிரவும், இந்தப் பறவைப் புகலிடத்தைப் பார்க்க வருவோர் ஏரியிலிறங்கித் தோப்பை அணுகக்கூடாது. இப்போது, வேடந்தாங்கல் போவதற்கு ஏரிக்கரைக்கே செல்லும் நல்லதொரு சாலை கட்டியிருக்கிறார்கள் ; பறவைகள் அங்கு கூடுகட்டுங்காலத்தில் வேடந்தாங்கலுக்குச் செல்வோருக்கு வசதியாய் செங்கற்பட்டிலிருந்து பஸ் வசதிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

## வேடந்தாங்கலில் கூடுகட்டும் பறவைகளைப் பற்றிய குறிப்புகள்.

நீர்க்காகங்கள்.—பெரிய நீர்க்காக்கை சில ஜதைகளே இங்கிருப்பதால் அவைகளைக் காண்பதரிது. வாத்தளவுள்ள கருமையான உடலும், கீழ் அலகின் அடியில் தோல் சிறகற்று மஞ்சளாகவிருப்பதும், சில மாதங்களில் நுண்ணிய வெண் சிறகுகள் முகத்தை மறைத்து நரை மயிர்போல் முளைத்திருப்பதும், இப்பறவையின் இனத்தை அறிய உதவும்.

சிறிய நீர்க்காகத்திற்கும் நடுத்தர நீர்க்காகத்திற்கும் தூரத்திலிருந்து வித்தியாசம் கண்டுபிடிப்பது கடினம். அண்மையில் இருந்து பார்த்தால் சிறியது ஓர் அண்டங்காக்கை அளவாய் இருப்பதும், நடுத்தரமானது கிட்டத்தட்டப் பருந்தளவு இருப்பதும் புலப்படும். நடுத்தர நீர்க்காகத்தின் தலையின் இரு பக்கங்களிலும், ஒரு ரூபாயளவில் வட்டமானதொரு வெள்ளை அடையாளக்குறியைப் பல மாதங்களில் காணலாம்.

எல்லா நீர்க்காகங்களும் முங்கி நீந்துவதில் திறமையுள்ளவை. நீரில் மூழ்கி, மீன்களையும்விட விரைந்து நீந்தி அவை இரை பிடிக்கும். தண்ணீரில் நீந்தும் நீர்க்காகத்தின் உடல் முழுதும் முங்கி, அதன் கழுத்து மட்டுமே நீர்மட்டத்தின் மேலிருக்கும்; தலை சற்று தூக்கினாற்போல் இருக்கும். நீர்க்காகங்கள் நீந்தியும் மூழ்கியும் இரைதேடுவதை வேடந்தாங்கல் ஏரியிலேயே பார்க்கலாம்; சில வேளைகளில் (முக்கியமாய் ஏரி நீர் வற்றி வருகையில்) அவை பல கூடி இப்படி வேட்டையாடும்.

மாலையில் நீர்க்காகங்களின் பெருங் கருந்திரள்கள் அதி வேகமாக இறக்கையடித்து வந்து தோப்பிலடையும் காட்சி பார்ப்போருக்குச் சிந்தையைக் கிளரும் காட்சி.

பாம்புத்தாரா.—இது பெரிய நீர்க்காகத்தின் அளவில் இருக்கும். அதன் நீண்ட கழுத்தின் அடி வளைந்தும் சற்று நீண்டவாலமைந்ததாகவும் இருக்கும். தண்ணீரில் முங்கி நீந்தி இரை பிடிப்பதில் வெகு சாமர்த்தியமுள்ளது. நீந்தும்போது நீண்ட கழுத்தும், சிறுதலையும், குத்துக்கத்தி போன்ற அலகுமே நீர்மட்டத்தின் மேலாகவிருப்பதால், தலை தூக்கி நீந்திவரும் பாம்பு போலவே அப்போது தென்படும். வேளைகளில் இறக்கைகளை அடிக்காது பரப்பி, வானத்தில் வட்டமிடும். வேடந்தாங்கலில் சிலர் இதை 'கலிகா' என்ற தவறான பெயரால் அழைக்கின்றனர்.

வெண் கொக்குகள்.—இவை சுத்த வெள்ளை நிறமாக இருக்கும்; அலகு கால்களின் நிறம் அளவு ஆகியவைகளிலிருந்து இவற்றின் இன அடையாளத்தை தூரத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சிறிய வெண் கொக்கை தூரத்திலிருந்தும் இனஞ்சொல்லிவிடலாம். இது ஓர் உண்ணிக் கொக்கின் அளவில் இன்னும் மெலிந்து கழுத்து நீண்டிருக்கும்; கால்களும் அலகும் கருப்பு;

ஆனால் கால் விரல்களின் மேல் தோல் மஞ்சளாகவிருக்கும்—பறக்கும்போது இந்தக் குறி தெளிவாக விளங்கும். கூடுகட்டும் காலத்தில் இதன் அடித்தலையினின்றும் இரண்டு நீண்ட மெலிந்த சிறகுகள் முளைத்துத் தொங்கும்; மார்பிலும் கீழ் முதுகிலும் நுட்பமாய் வகுத்த மெல்லிய வெண் சிறகுகள் முளைத்திருக்கும். இது தன் பரந்த இறக்கைகளை விரித்து அவசரமின்றி ஒய்யாரமாகப் பறந்து செல்வது மிகவும் அழகான காட்சி.

நடுத்தர வெண் கொக்கிற்கும் பெரிய வெண் கொக்கிற்கும் அளவிலுள்ள வேற்றுமை தூரத்தில் தென்படாது. கூடுகட்டுங் காலத்தில் இரண்டிற்கும் மார்பிலும் கீழ் முதுகிலும் நுட்பமாய் வகுத்த வெண் சிறகுகள் முளைக்கும் (தலையில் இரு சிறகுகள் இவைகளுக்கில்லை). வேறிடங்களில், பெரிய வெண் கொக்கின் மஞ்சள் அலகு கூடுகட்டும்போது கருப்பாய் மாறவே, அலகிலிருந்தும் இன வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. வேடந்தாங்கலில் பெரிய வெண் கொக்கின் அலகு நிறம் மாருது மஞ்சளாகவே இருப்பதால் எளிதில் இதை அடையாளம் கண்டு கொள்ளலாம். பெரிய வெண் கொக்கே கொக்குகளில் உயரமானது—இது ஒரு நரையான் உயரமிருக்கும். தோப்பு பக்கமாக நீர் ஆழமாகவில்லாதவிடங்களில் இது மெல்ல நடந்து மீன் வேட்டையாடும்.

உண்ணிக்கொக்கு.—புல் தரையில் மேயும் மாட்டு மந்தைகளை அவை பின்பற்றிச் செல்வதால் சிலர் இவற்றை 'மாட்டுக் கொக்கு' என்றழைப்பதுண்டு. இவை முக்கியமாய் பூச்சியிரையையே புசிக்கும். கழனிகளிலும் கரையோரமாகவும் நடமாடும் கூட்டங்களில் இதைப் பார்க்கலாம். அலகு மஞ்சள் நிறம்.

மடையான்.—சென்னையிலும் சுற்றுப் பக்கத்திலுள்ள ஊர்களிலும் சகஜமாகக் காணப்படும் இப்பறவைக்கு 'மடையான்' என்ற பழந்தமிழ்ப் பெயரை அநேகர் உபயோகிப்பதில்லை, இதைக் 'குருட்டுக் கொக்கு' என்றழைக்கிருர்கள். இந்தப் பெயர் அதன் கண் பார்வையைக் குறிப்பதில்லை. நம்மை அது கண்ணைக் கட்டி மயக்குவதைத்தான் குறிக்கும்! ஒரு வாய்க்காலோரமாகவோ கரையோரமாகவோ மடையான் அசையாது ஒடுங்கி மீன் பிடிக்க சமயம் பார்த்து நின்றுகொண்டிருக்கையில், அதன் உடல் நிறம் சூழ்ந்துள்ள மண் தரையின் நிறத்தை



இளம் வக்கா.

ஒத்திருக்கும். சமீபத்திலிருக்கும் மனிதருக்கும் அதன் இருப்பு விளங்காது. திடீரென்று தன் பரந்த வெள்ளையிறக்கைகளை விரித்து, மாயமாக வெண்பறவையாக மாறி, அது பறந்து செல்லும்போதே அது அங்கிருந்ததை நாம் அறிவோம்!

வக்கா.—இவை பெரும்பாலும் இருட்டிய பின்பே வெளிவரும். வயதுவந்த வக்காவின் மேல்புறம் சாம்பல் நிறமாயிருக்கும்; மேல்தலை கருத்து, கருநிறச் சிறகுகளும் இரண்டு நீண்ட வெண்சிறகுகளும் செறிந்த கொண்டை இதற்குண்டு; அடிப் பாகம் வெளுப்பு; கூடுகட்டுங்காலத்தில் கால் சிவந்திருக்கும். வளர்ச்சியடைந்தும் இன்னும் பருவமடையாத வக்கா, மடையானைப்போல் களிமண் நிறப்புள்ளிகள் தெளித்திருக்கும்—ஆனால் வெள்ளை இறக்கைகள் கிடையாது.

நரையான்.—"நாராயணனை நராயணனென்றே கம்பன் ஓராமற் சொன்ன" குற்றத்தைக் காளமேகப் புலவர் எடுத்துக் காட்டியிருக்கிறுரேயொழிய, யாரும் இதுமட்டும் "நரையான்" "நாராயணன்" ஆன விந்தையை எடுத்துச் சொல்லவில்லை! ஆனல் வேடந்தாங்கலில் இதையும் காணலாம். இந்தப் பறவைக்கு "நரையான்", "நாரையான்" என்ற பெயர் களே வேறெங்கும் வழங்குகின்றன. தமிழில், பறவையினங் களின் பெயர்களொடு "புள்", "பட்சி", "குருவி" என்ற பொதுப் பெயர்களையும் கடையடை மொழிகளாகச் சேர்ந்துச் சொல்வது வழக்கம். உதாரணமாக, செம்போத்துப்புள். மீன்குத்திப்புள், மரங்கொத்திப்புள், சோளப்பட்சி, மைனுப்பட்சி, பாலக்குருவி, இருதலைக்குருவி, தினைக்குருவி. வேடந்தாங்கலில் "நாரையான் + பட்சி" என்பது "நாராயணப்பட்சி" என்று மாறி, இப்பெயராலேயே நரையானை அழைக்கிறுர்கள்.

வக்கா, மடையான், கொக்குகள், நரையான் இவையெல்லாம் பறந்து செல்லும்போது கழுத்தை மடக்கி, தலையை முதுகை ஒட்டினுற்போல் இழுத்துக்கொள்ளும். நாரை வகைகள் கழுத்தை நீட்டிப் பறக்கும்.

நத்தைக்குத்திநாரை.—இந்திய நாரையினங்களில் இதுவே சிறியது; ஆயினும் வேடந்தாங்கலிலுள்ள பறவைகளில், நரையான், துடுப்பு மூக்கு நாரை இவைகளுடன் ஒப்பிடும்போது இது பெரியது; நரையான் அளவில் இன்னும் உடல் தடித திருக்கும். வயதுவந்த நத்தைக்குத்திகளின் அலகுகள், மேலலகும் கீழலகும் ஒன்றேடொன்று இணைந்து கூடாமல், பறவை வாய் மூடியிருக்கும்போதும் இடையே ஒரு துளை இருக்கும்; இளம் பறவைகளின் அலகுகள் இடையே துளை கிடையாது. நீரில் வாழும் நத்தையினங்களே இந்த நாரையின் முக்கிய இரை. மீன் முதலிய மற்ற இரையையும் இது தேடும்.

மாலையில் இரைதேடி வீடு திரும்பும் நத்தைக்குத்திகள் பெருந்திரளாகக் கூடி வானத்தின் உச்சியில் தோப்பின் மேல் இறக்கை பரப்பி வட்டமிடும். ஆகாயத்தில் மிதக்கும் புள்ளி களாகவே தென்படும். அவ்வளவு உயரத்தில் அவை பறக்கும். சில நிமிஷங்கள் இப்படி வட்டமிட்டபின், எல்லாம் ஒருங்கே இறக்கை மடித்து பெரும் வேகத்துடன் செங்குத்தாய்ப் பாய்ந்து இறங்கும்—தோப்பை அணுகினதும், பல திக்குக்களிலும் சிதறி

இறக்கை விரித்துத் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து செல்லும் இந்த அற்புதமான காட்சியைக் கண்டவர் எளிதில் இதை மறக்க மாட்டார்கள்.

துடுப்பு மூக்கு நாரை.—இதை இலங்கையில் "சப்பைச் சொண்டான்" என்பர், ஆங்கிலத்தில் Spoonbill என்பர். வேடந்தாங்கலில் 'மண்வெட்டு வாயன்' என்று சொல்லுகிறார்கள். சட்டுவம் போல் நுனிவிரிந்து சப்பையாகவுள்ள விசித்திர அலகைக் கருதியே இவ்வாறு பெயர்வைக்கப்பட்டுள்ளது, ஜதை கூடும் காலத்தில் இதற்குத் தலையின் பின்புறமாக வெள்ளைச் சிறகுகளடர்ந்த ஒரு பெருங்குடுமியுண்டு; வேடந்தாங்கலில் வந்திறங்கிய நாளிலிருந்து இங்கிருந்து வெளியேறுமட்டும், இங்குள்ள துடுப்புமூக்கு நாரைகளுக்கு இப்படிக் குடுமி வாய்த்திருப்பதைக் கவனிக்கலாம்—குஞ்சுகளுக்கும், வளர்ந்த இளம் பறவைகளுக்கு மட்டுமே தலை மொட்டையாயிருக்கும்.

கங்கணம்.—இதுவும் கிட்டத்தட்ட துடுப்புமூக்குநாரை அளவில், அதைப்போல் வெள்ளையாகவிருக்கும். ஆனால், கழுத்து சிறகற்றும் தலையும் மூக்கும் கருப்பாயும் இருக்கும். இதன் அலகு வளைந்து அரிவாள் போலிருப்பதால் வேடந்தாங்கலில் இதை 'அரிவாள் மூக்கன்' என்கிறார்கள். வக்காக்களைப் போல இதுவும் இரவில் இரை தேடும் பறவை—ஆனால், குஞ்சுகளுக்கு இரைதேட பகல்போதிலும் வெளிக்கிளம்பும்.

சென்னை அரசாங்கத்திற்காக சென்னை எழுதுபொருள் அச்சுத்தொழில்
கட்டுப்பாட்டு அதிகாரியால் பதிப்பிக்கப்பெற்றது.

